# 4. அரங்கத்தில் ஆடலாம்

## பண்பாட்டுச் சின்னங்கள்

**நாம் வாழும் பகுதிகளில் பல்வேறு கலை வடிவங்கள் உள்ளன. அவற்றுள் சிலவற்றைப் பற்றிய விளக்கங்களை அறிந்து கொள்வோம்.**

## கரகாட்டம்

நாட்டுப்புறக் கலைகளில் மிகவும் பழமையானது கரகாட்டம். கரகாட்டக்காரர்கள் தங்கள் கால்களில் சலங்கைகளைக் கட்டியிருப்பர். ஆடும் போது அவை 'சல் சல் சல்' என ஓசை எழுப்பும்.

கரகத்தின் மேல்பகுதியில் மலர் சுற்றப்பட்ட கூம்பு வடிவம் இருக்கும். அதன் நடுப்பகுதியில் நீண்ட குச்சி ஒன்று செங்குத்தாக இணைக்கப் பட்டி ருக்கும். குச்சியின் உச்சியில் ஒரு 'பொய்க்கிளி' வைக்கப்பட்டிருக்கும். கரகம் ஆடும் போது கிளியும் சுழன்று கொண்டே இருக்கும். இது பறப்பது போன்று தோன்றும்.



நையாண்டிமேளம் இக்கலைக்குப் பக்கமேளமாகப் பயன்படுத்தப் படுகின்றது. இசைக்குழுவினர் வட்டமாக நிற்பர். அவ் வட்டத்திற்குள் குதித்தும். உட்கார்ந்தும், ஓடியும், அசைந்தும் தோள்களை அசைத்தும், மேளத்திற்கு ஏற்ப நடனமாடுவர். கரகம் கீழே விழாதவாறு ஆட்டக்காரர்கள் திறமையாக ஆடுவர். பெண்களும் ஆண்களும் கரகாட்டம் ஆடுவதுண்டு.

## மரக்கால்ஆட்டம்

மரக்கால் ஆட்டம் ஆடுபவர் ஏறத்தாழ ஆறு அடி நீளமுள்ள மரக்கட்டைகளைத் தம் பாதங்களோடு சேர்த்துக் கட்டியிருப்பார்.

கைகள், கால்கள், உடம்பு ஆகியவற்றை முன்னும்பின்னும் நன்கு அசைத்துத் தாளநடைக்கு ஏற்பச் சுவடுவைத்து ஆடுவர். தற்போது சில இடங்களில் மட்டுமே இவ்வாட்டத் தைக் காண முடிகிறது.


விழாக்கள் மற்றும் ஊர்வலங்களின் போது இது ஆடப் படுகிறது. இவ்வாட்டம் ஆண்களால் மட்டுமே ஆடப்படுகிறது. மரக்கால் ஆட்டக் கலைஞர்கள் ஆட்டத்தின் போது ஓய்வு எடுத்துக்கொள்ள உயரமான நாற்காலிகளைப் பயன் படுத்திக்கொள்வர்.

## உருவாக்குவோம்

- உங்களுக்குத் தெரிந்த கலை வடிவங்களின் படங்களைத் திரட் டுங்கள், தொகுப்பு உருவாக் குங்கள்

## ஆடிக் காட்டுவோம்

- உங்கள் பாடசாலையில் நடைபெறும் விழாவில் நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சிகள் நடத்துங்கள்.



## சவிட்டு நாடகம்

இது கிருத்தவர்களின் மத்தியில் செல்வாக்குள்ள ஒரு நாடக வடிவம். சவிட்டு நாடகத்தில் நடிப்பு, பாட்டு, சுவடு ஆகியன ஒன்றிணைந்ததாக அமைந்திருக்கும். 'தட்டு' என்று சொல்லப் படும் அரங்கில் நாடகம் நடைபெறுகிறது. காலால் மிதிக்கும் போது ஒலி எழுமாறு பலகைகள் அடுக்கித் தட்டு செய்யப்படுகிறது. தரைப்பகுதியிலிருந்து சுமார் மூன்று அடி உயரத்தில் தட்டு அமைந்திருக்கும். தட்டின் பக்கத்தில் ஒரு பெரிய சிலுவை நிறுத்தி வைக்கப்படும். சவிட்டு நாடகத்தின் கதாபாத்திரங்கள் பகட்டான வேடமிட்டிருப்பர்.

இந்நாடகம் இரவில் நடத்தப்படுகிறது. பிரார்த்தனைப் பாடலோடு நாடகம் தொடங்குகிறது. உரையாடல்கள் அனைத்தும் பாடல் வடிவில்தான் இருக்கும் சவிட்டு நாடகத்தின் ஆசான் 'அண்ணாவி' என்று அறியப் படுகிறார். ஆண்களே பெண் வேடங்களும் அணிவர். முற்காலங்களில் மத விழாக்களில் மட்டுமே சவிட்டுநாடகம் இடம்பெற்றது. பின்னர் பொது நிகழ்ச்சிகளிலும் நடத்தப்பட்டது. கிருத்துவ சமய நூலின் கருத்துகள் சவிட்டு நாடகத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

## பரிசை முட்டுக்களி



பரிசையும், வாளும் பயன்படுத்தி இக்கலை நடத்தப்படுகிறது. பரிசை செய்வதற்காக மரக்கட்டை, இறகு முதலியன பயன்படுத்தப்படுகின்றன. கமுகின் மட்டையால் வாள் செய்யப்படுகிறது. ஒருகையில் வாளும், அடுத்த கையில் பரிசையும் ஏந்தி நிற்பர். கேடயம் என்பதன் இன்னொரு சொல்தான் பரிசை. வாளை ஓங்கியும், பரிசையால் தடுத்தும் பல அடவு முறைகளை வெளிக்காட்டி ஆடுகின்றனர். சில இடங்களில் வாளுக்கு மாற்றாகத் தண்டம் பயன்படுத்தப்படுகிறது. இந்துக்கள், கிருத்துவர்கள், முஸ்லிம்கள் இக்கலையை நடத்தி வருகின்றனர். பாலக்காட்டில் இக்கலை 'வட்டக்களி' என்னும் பெயரில் அறியப்படுகிறது. பத்துபேர் அடங்கிய சிறு குழுக்கள் இதில் பங்கு பெறுகின்றனர். உடலில் மெழுகை புரட்டிக் கொள்வர். புராணக்கதைகள் கருப்பொருளாக அமைந்த பாடல்களைப் பாடி ஆடுகின்றனர். பாடல்கள் மெட்டுடன் பாடப்படும். ஆடல் பல்வேறு அசைவுகளுடனும் அமைந் திருக்கும்.

## தப்புமுட்டுக்களி

இது முஸ்லிம் மக்களிடையே செல்வாக்கு பெற்றக் கலைவடிவமாகும். 'தப்பு' என்பது ஓர் இசைக் கருவியாகும். மரக்கட்டையை கடைந்து அதன் ஒரு பக்கம் தோலினால் கட்டப்பட்டிருக்கும். இந்த 'தப்பு' வை அடித்துப் பாட்டுப்பாடி குழுவாக ஆடுவார்கள்.



குழுவின் தலைவர் பாடும்பாட்டைப் பிறர் ஏற்றுப் பாடி சுவடுவைத்து ஆடுகின்றனர். வட்டமாக நின்று தமது உடலை விதவிதமாக அசைத்து ஆடுவது இக்கலையின் சிறப்பாகும். முன்னர் அரபி மொழியிலுள்ள பாடல்களைப் பாடி ஆடினர்.

வீட்டுச் சடங்குகளில் மட்டுமன்றி பிற நிகழ்ச்சிகளிலும் இக்கலை இடம்பெறுகிறது. முற்காலங்களில் ஆண்கள் மட்டுமே இக்கலையை நடத்தினர். தற்போது சில கட்டுப்பாடுகளுடன் பெண்களும் இக்கலையை நடத்துகின்றனர்.

### கண்டுபிடிப்போம்

- என் மனதிலுள்ள கலை வடிவம் எது? குறிப்புகள் சொல்கிறேன் கண்டுபிடியுங்கள்.

(உ.ம்)
- நான் காட்டில் வசிப்பவன்.
- நான் விலங்கினத்தைச் சார்ந்தவன்.
- மாமிசத்தையே உண்பேன்.
- என் பெயரிலும் பல இடங்களில் ஆட்டம் நடைபெறுகிறது? அந்த ஆட்டம் எது?

- இதுபோன்ற நாட்டுப்புற விளையாட்டுகள் ஏராளம் உள்ளன. குறிப்புகள் எழுப்பி, மனதில் நினைத்த விளையாட்டைக் கூறுங்கள்.



# சதங்கை ஒலி

அகிலம் முழுதும் ஓங்கி நிற்கும்
ஆடற் கலையே நாட்டியமாம்!
இசையும் தாளமும் பாவனையும்
இறைவன் அளித்த வரமன்றோ?
(அகிலம்)

முகம் தனில் பாவனை நிழலாட
முத்திரை கைகளும் சேர்ந்தாடும்!
விழிகளும் விரல்களும் விளையாட
இதழ்களில் புஞ்சிரி பூத்தூவும்!
(அகிலம்)

பாதங்கள் இயக்கும் சலனங்களே
பரத நாட்டியச் சிறப்பாகும்!
மேதகு கலையின் நவரசங்கள்
மீட்டியே பரதம் ஆடிடுவோம்!
(அகிலம்)

சதங்கை ஒலியின் தாளங்கள்
சபையினைச் சொக்கச் செய்திடுமே!
இதயம் கவர்ந்த இக்கலையை
இனிதே போற்றிக் காத்திடுவோம்!
(அகிலம்)

## மெட்டு அமைப்போம்

- பாடலைப் பல மெட்டுகளில் குழுவாகவும் தனியாகவும் பாடுங்கள்.

## எனக்குப் பிடித்த வரிகள்

- விருப்பமான வரிகள் எவை? ஏன்?

## கவிதை எழுதுவோம்

- பாடலை நிறைவு செய்யுங்கள்.

  கலைகள் கற்றுத் தேர்ந்திடுவோம் – நம்
  கவலைகள் எல்லாம் மறந்திடுவோம்!

  ..............................................................................................................

  ..............................................................................................................

  ..............................................................................................................

  ..............................................................................................................

## புதிய சொற்கள் அமைக்க:

- கவிதை – கதை, கவி, விதை, தை
- சிலப்பதிகாரம் – ______ ______ ______
- பாரதியார் – ______ ______ ______
- திருக்குறள் – ______ ______ ______
- பாரதம் – ______ ______ ______
- நாட்டுப்பற்று – ______ ______ ______

## முதலெழுத்தை மாற்றிப் புதிய சொற்கள் அமைக்க:

- ஈட்டி ______ ______ ______
- சங்கு ______ ______ ______
- மரம் ______ ______ ______
- கன்று ______ ______ ______
- நகை ______ ______ ______
- பஞ்சு ______ ______ ______
- தினம் ______ ______ ______
- தேக்கு ______ ______ ______
- விருந்து ______ ______ ______

